பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 14 திங்கட்கிழமை (29 07-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 163

# பரந்தனில் இருந்து படை முன்னேறும்!

## ராணுவ நடவடிக்கையின் அடுத்தகட்டம் விரைவில்

கொழும்பு, ஜூலை 29

ஆனையிறவிலிருந்து 'உண்மை வெற்றி' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து பரந்தனைச் சென்றடைந்திருக்கும் ஸ்ரீலங்காப் படைகள் அங்கிருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்குள் மேலும் முன்னேறும் அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கையை விரைவில் ஆரம்பிக்கும்.

இலங்கை வானொலி இத்தகவலை வெளியிட்டது.

நேற்று முன்தினம் பரந்தன் நகரைக் கைப்பற்றிய அரச படைகள் தற்போது அங்கு தமது நிலைகளைப் பலப்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருக்கக் கூடிய கண்ணி வெடிகள் மற்றும் பொறி வெடிகளை அகற்றுவதில் படையினர் கவனம் செலுத்தி வருவதாக இலங்கை வானொலி அறிவித்தது.

பரந்தன் பகுதியில் குடி மக்கள் எவரும் வசிக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

பரந்தனில் பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னர் தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

படையினர் புதிதாகக் கைப்பற்றிய பகுதியில் நேற்று பெரும் மோதல் சம்பவங்கள் ஏதும் ஏற்பட்டதாகத் தக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் வாழும் பகுதிகளில் படையினர் தீவிர தேடுதல்

கொழும்பு, ஜூலை 29

தெஹிவளை ரயில் குண்டு வெடிப்பை அடுத்து தமிழர்கள் கூடுதலாக வாழும் இடங்களான வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை ஆகியவற்றில் படையினர் பெரும் அளவில் தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

இப்பகுதியில் ஏராளமான படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

நூற்றுக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-3)

## களுத்துறையில் பதற்றம்

கொழும்பு, ஜூலை 29

தெகிவளை ரயில் குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் களுத்துறை நகரில் பதற்றம் நிலவுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

களுத்துறையில் உள்ள தமிழருக்குச் சொந்தமான கடைகள் பூட்டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெகிவளையில் நடந்த குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களில் பலர் களுத்துறை, அளுத்கம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

### வன்னியில் ஷெல் தாக்குதல்:

## பத்துக்கும் மேற்பட்டோர் வவுனியா ஆஸ்பத்திரிக்கு

வவுனியா, ஜூலை 29

கடந்த சில தினங்களில் வன்னிப்பகுதியில் ஷெல் தாக்குதல்களினால் படுகாயமுற்ற பத்துக்கும் அதிகமான பொதுமக்கள் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டிருப்பதாக வவுனியாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு, மாங்குளம், கனுங்கேணி, முழங்காவில், முள்ளியவளை, மல்லாவி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வாகனம் மூலம் வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## புலோலியில் மேஜர் சூட்டுக்குப் பலி

கொழும்பு, ஜூலை 29

வடமராட்சி புலோலி தெற்கு பகுதியில் நேற்று முன்தினம் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மேஜர் பி. ஏ. பக்கீர் தூரத்தில் மறைந்திருந்து தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகளின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார் என இலங்கை வானொலி அறிவித்தது.

உடுப்பிட்டிப் பகுதியில் இராணுவ காவல் அரண் ஒன்றின் மீது கைக்குண்டு ஒன்றை வீசமுற்பட்ட புலிகளின் உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-3)

## திருமலையில் 2 படையினர் பலி

கொழும்பு, ஜூலை 29

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கிரனேட் வீச்சுத் தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர்; மூன்று படையினர் காயமடைந்தனர்.

காயமுற்றோர் திருமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி அறிவித்தது. (உ-3)

## போரதீவில் பஸ் கடத்தல்

மட்டக்களப்பு, ஜூலை 29

மண்டூரில் இருந்து மட்டக்களப்புக்குச் சென்று கொண்டிருந்த மட்டக்களப்பு போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று கடந்த வியாழக்கிழமை இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டது.

போரதீவில் பஸ்ஸை மறித்த அந்தக் கோஷ்டியினர் பயணிகளை இறக்கி விட்டு பஸ்ஸை கடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# சாவகச்சேரியில் 10 துருப்புகள் பலி

சாவகச்சேரி தனங்களப்புப் பகுதியில் நேற்று முற்பகல் 11-15 மணியளவில் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் ரோந்து சென்ற படையினரில் ஓர் அதிகாரி உட்பட பத்து இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகம் இத்தகவலை வெளியிட்டதாக கொழும்பில் ''எவ். எம்.'' வானொலி நேற்றிரவு அறிவித்தது.

இத்தாக்குதல் பற்றிய மேலதிக விவரங்கள் கிடைக்கவில்லை. (உ-3-10)

## வவுனியா வருவோர் மீது 4 நாள்களாகக் கெடுபிடி

தெஹிவளை ரயில் குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து கொழும்பு மற்றும் தெற்குப் புறப் பகுதிகளில் இருந்து வவுனியாவுக்கு வருவோர் தொடர்ந்து நான்காவது நாளாக நேற்றும் கைது செய்யப்பட்டு விசாரணைக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை, மதவாச்சி, அனுராதபுரம் எனத் தென் பகுதிகளில் இருந்து வாகனங்கள் மூலம் வருபவர்களே வயது வேறுபாடின்றிக் கைது செய்யப்பட்டு தாண்டிக்குளம் தடை முகாமுக்குக் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது

நான்கு நாள்களாகத் தொடரும் இத்தகைய கைது செய்யும் படலத்தில் சிக்கி பல நூற்றுக்கணக்கானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கெடுபிடி நிலையில் நேற்று மட்டும் சற்று தளர்வு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளம் ஊடாக போக்குவரத்து ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 29

கடந்த 18 ஆம் திகதி முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து திடீரென தாண்டிக்குளம் ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டதால் வவுனியாவில் சிக்கிக் கொண்ட சுமார் ஆயிரத்து இருநூறுக்கும் அதிகமான மக்கள் பத்து நாள்களின் பின்னர் நேற்று மீண்டும் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்குத் திரும்பிச்செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதியில் இருந்து வியாபாரம், வைத்திய தேவைகள், அரச அலுவலகத் தேவைகள் எனப் பல்வேறு நோக்கங்களுக்காக வவுனியாவுக்குச் சென்றோரே தாண்டிக்குளம் பாதை மூடப்பட்டதால் வவுனியாவில் பத்து நாள்கள் சிக்கிக் கொண்டனர்.

இவ்வாறு வந்தவர்கள் மட்டும் தாண்டிக்குளம் ஊடாக தமது இடங்களுக்குத் திரும்ப நேற்று அனுமதிக்கப்பட்டனர்.

ஓமந்தையில் இருந்து மக்கள் இன்று தாண்டிக்குளம்வர அனுமதிக்கப்படுவார்கள் என

(6 ஆம் பக்கம் பார்க்க

## குண்டுப் புரளியால் கொழும்பில் பதற்றம்

கொழும்பு, ஜூலை 29

கடந்த வெள்ளியன்று குண்டுப் புரளியால் பொரளை வெலிக்கடைப் பகுதியிலும்—

புறக்கோட்டை சென் ஜோன்ஸ் மீன் சந்தைப் பகுதியிலும்— பெரும் பதற்றம் நிலவியது.

கடைகள் மூடப்பட்டு மக்கள் அச்சத்தினால் வீடுகளுக்குள் முடங்கிக் கொண்டனர்.

தெஹிவளை குண்டு வெடிப்புக்குப் பின்னர் படையினர் கூடுதலாகப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# நிபந்தனைகளை ஏற்றால் மட்டுமே விடுதலைப் புலிகளுடன் பேச்சு

## அமைச்சர் கதிர்காமர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதானால் —

[illegible] ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகளை அந்த அமைப்பு ஏற்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு நேற்றுக் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

குறிப்பிட்ட காலவரையறை ஒன்றை நிர்ணயித்து அதற்குள்ளேயே பேச்சு நடத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

அமைச்சர் கதிர்காமர் மேலும் கூறியதாவது:-

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாந்தி மரக்காலை

1964 — 1995 ஆவணி வரை ஆனைப்பந்தியில் தரமான பனை மரங்கள், சிலாகைகள், வளைகள் விற்பனை செய்த ''சாந்தி மரக்காலை'' தற்போது ஆனைப்பந்திச் சந்திக்கும் வீரமாகாளி அம்மன் கோவிலுக்கும் இடையில் இயங்குகின்றது என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத் தருகிறோம்.

க. பன்னிருகரம்,
261, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (42016)



## திருமறைக் கலாமன்றம் வகுப்புகள் நடைபெறுகின்றன

★ இசை:- செவ்வாய், வியாழன் மாலை 4-30 மணி
★ நடனம்:- புதன், வெள்ளி மாலை 3-30 மணி
★ ஓவியம்:- சனி, ஞாயிறு காலை 9-00 மணி
★ நாடகக் களப் பயிற்சி:- ஞாயிறு மாலை 4-30 மணி

கலைஞர் ஒன்று கூடல் மாதத்தின் முதல் ஞாயிறு காலை 10-30 மணி

தொடர்பு:-
பணியகம்,
திருமறைக் கலாமன்றம்,
யாழ்ப்பாணம்.
(C/2684)



## NEW SCIENCE COLLEGE

பருத்தித்துறை வீதி, குருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

# A/L 98

PHYSICS — திரு. குமரன்
MON. — FRI. — 4-00 — 5-00
CHEMISTRY — திரு. சிவத்திரன்
SAT. — SUN. — 3-00 — 4-00
BOTANY — திரு. குணசீலன்
SAT. — SUN. — 4-00 — 5-00
ZOOLOGY — திரு. கெங்காதரன்
TUE. — THU. — 4-00 — 5-00
PURE / APPLIED ] MATHS — திரு. கருணா
SAT. — SUN. — 4-00 — 5-30

ஆரம்பம்:- 29-07-96
திங்கள் 8-30 A.M
(42023)



## பாரதி
சித்தன்கேணி

# A/L 98

ஆரம்பம்: இன்று (29-7-96) பிற்பகல் 4-00 மணி

பொருளியல் — திரு. சண்
வர்த்தகம் — திரு. பசில்
கணக்கியல் — திரு. சதீஸ்குமார்
வ.புள்ளிவிபரவியல் — திரு. தவசேகர்
அளவையியல் — திரு. R.P. சர்மா
தமிழ் — திரு. பாலா
இந்துநாகரிகம் — திரு. பாலா
இந்துசமயம் — திரு. சிவானந்தன்
புவியியல் — திரு. ஆர்த்திகன்
நாடகமும் அரங்கியலும் — திரு. சந்திரன்

A/L 96, 97 வகுப்புகள் நடைபெறுகின்றன.
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
(42021)


## கண்ணீர் அஞ்சலி

டாக்டர் A. L. ஏபிரகாம்

அவர்களின் மறைவுக்கு
அஞ்சலி செலுத்துகின்றோம்.

திருமறைக் கலாமன்றம்,
யாழ்ப்பாணம்.
(C/2685)

# இளவாலை முதியோர் இல்லத்தில் தங்கி உள்ள 14 வயோதிபர்கள்

## அழைத்துச் செல்லுமாறு உறவினருக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 29

கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்த சமயம், இங்கு விடப்பட்டிருந்த வயோதிபர்களில் 14 பேர் இளவாலையில் உள்ள முதியோர் இல்லத்தில் தங்கியுள்ளனர் என்று இளவாலை ஹென்றி அரசர் கல்லூரியைச் சேர்ந்த அருட் தந்தை ஏ. ஜே. யேசுதாசன் தெரிவித்தார்.

இந்த இல்லத்தில் தங்கியிருந்தவர்களில் பெரும் பான்மையானவர்கள் அவர்களின் உறவினர்களால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் —

தற்போது தங்கியுள்ள 14 வயோதிபர்களையும் அவர்களது உறவினர்கள் அழைத்துச் செல்லுமாறும் — அவர் கேட்டுள்ளார்.

விவரம் வருமாறு!

★ நன்னித்தம்பி விசுவலிங்கம் (68 வயது – அளவெட்டி)
★ நடுவில் வேலுப்பிள்ளை (96 வயது — தெல்லிப்பளை கிழக்கு)
★ ஆறுப்பிள்ளைகந்தையா (75 வயது — பொன்னன் கிற்றதடி, ஏழாலை)
★ வீரசிங்கம் கந்தையா (82 வயது — ஊரங்குளை)
★ ராமலிங்கம் சங்கரப்பிள்ளை (72 வயது — ஏழாலை)
★ அம்பலவாணர் ஐயாத்துரை (ஏழாலை வடக்கு)
★ விசாலாட்சி சிற்றம்பலம் (ஏழாலை கிழக்கு)
★ கதிரவேலு யோகு (55 வயது — வாய்க்கால் தரவை, நீர்வேலி வடக்கு)
★ சிவபாக்கியம் நாகலிங்கம்.
★ அன்னமுத்து அப்புத்துரை (70 வயது — கிராயிட்டி வைரவர் கோவிலடி)
★ ஜெயராணி தண்டாயுதபாணி (51 வயது — ஊரெழு
★ வினாசி விசுவன் (70 வயது — கூட்டத்தார் கோவிலடி, தெல்லிப்பளை)
★ பூமி தையல்முத்து (துலாத்தெரு, வட்டுக் கோட்டை)
★ சின்னம்மா வல்லிபுரம் (77 வயது — ஏழாலை கிழக்கு) (இ-3)

## நல்லூர் உற்சவ கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஜுலை 28

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 27 தினங்கள் நடைபெறும்.

திருவிழாவிற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பற்றிய கலந்துரையாடல் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே.பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் இத் தகவலைத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடல் கூட்டத்திற்கு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை, சென்ஜோன்ஸ் அன்புலன்ஸ், சாரணர், மக்கள் நலன்காக்கும் பிரிவினர், சைவத்தொண்டர், ஆலய உரிமையாளர் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் பதவியாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (அ-30)

## கண்டியில் குண்டுப்புரளி

கொழும்பு, ஜுலை 29

கடந்த வெள்ளியன்று கண்டி-பேராதனை வீதியில் உள்ள ஒரு பாடசாலையின் வளவில் சந்தேகத்துக்கிடமான பார்சல் ஒன்று கிடந்ததையடுத்து அங்கு குண்டுப் புரளி கிளம்பியது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட பாடசாலைக்கு விரைந்த பெற்றோர் ஆரம்ப வகுப்புகளில் உள்ள மாணவர்களை அவசர அவசரமாக அங்கிருந்து அழைத்துச் சென்றனர்.

இத்த குண்டுப் புரளியால் பதற்றம் நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


## D. M. I.

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# A/L 97

பங்குடைமை

திரு. வன்னியசிங்கம்
B.Co (Hons)

ஆசிரியருடைய வகுப்பு
[illegible]
[illegible]
(42020)


# மரண அறிவித்தல்கள்

## கைலாசபிள்ளை விஷ்வலிங்கம்

திருநெல்வேலி பத்திரகாளிகோவிலடி கைலாசபிள்ளை விஸ்வலிங்கம் (19-07-96) வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

இவர் திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை-மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - சின்னாமாவின் மருமகனும், காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், விஜயகுமார், விஜயராணி, இரத்தினகுமார் (சீமேந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), சந்திரகுமார், சூரியகுமார், சிறிதரன் (சுவிஸ்), சத்தியலிங்கம் (கட்டார்), தியாகலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம் (விவசாய திணைக்களம் வவுனியா), கமலாதேவி, சுபத்திரா (ஆசிரியை வவுனியா), கண்ணம்மா, மகாலட்சுமி, செல்வி (சுவிஸ்), ஆகியோரின் மாமனாரும், பராசத்தி, கனகரத்தினம், காலஞ்சென்ற சரஸ்வதி (முன்னாள் போதனாசிரியை யாழ். பல்கலைக்கழகம்), பொன்னுத்துரை (பொறியியலாளர் ஓமான்), பொற்கொடி (கனடா), இராசபாக்கியம், கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கராஜா (P. W. D யாழ்ப்பாணம்) வின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வவுனியாவில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. சூரியகுமார்
(மகன்)

அம்மன் வீதி,
பத்திரகாளி கோவிலடி,
திருநெல்வேலி.
(42015)

## கைலாசபிள்ளை மீனாட்சிப்பிள்ளை

திருநெல்வேலி கிழக்கு, சட்டநாதர் வீதியை பிறப்பிடமாகக் கொண்டிருந்த கைலாசபிள்ளை மீனாட்சிப் பிள்ளை 28-7-96 இல் காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளையின் (க. செ. கைலாசபிள்ளை மருந்துக்கடை உரிமையாளர்) அன்பு மனைவியும், விசுவநாதபிள்ளையின் (கனடா) அருமைச் சகோதரியும், சறோஜினிதேவி, இராமநாதன், திரிபுவனேஸ்வரன், இராசரெத்தினம் (க. செ. கைலாசபிள்ளை &சன்ஸ் யாழ்ப்பாணம்) இந்திராணி ஆகியோரின் அன்புத்தாயாரும், கந்தசாமி (புனர்வாழ்வுப் பகுதி யாழ். செயலகம்), பாஸ்கரன் (துவாரக மில்), கமலராணி, கலாதேவி, சசிகலா ஆகியோரின் அன்பு மாமியாரும், சசிகலா (வர்த்தக திணைக்களம் நல்லூர்), சசிகரன், சசிரேகா, சுஜித்தா, தினேஸ்குமார், ரமேஸ்குமார், தர்சனா, கீர்த்தனா, துஷியந்தினி, தனுசியா, வசிகரன், சஞ்சீவீ, துவாரகா, பீஷ்மன், விதுசன், வக்சலன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-7-96) நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைகள் செம்பாட்டு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
கை. இராமநாதன் (மகன்)
க. செ. கைலாசபிள்ளை &சன்ஸ்
C. S. K. மருந்துக்கடை உரிமையாளர்.
யாழ்ப்பாணம். (42022)

## திருமதி திரவியம் ஆலாலசுந்தரம்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி திரவியம் ஆலாலசுந்தரம் கொழும்பில் 20 - 7 - 96 அன்று காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி நாகம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு ஆலாலசுந்தரத்தின் அன்பு மனைவியும், ஆவார். இறுதிக் கிரியைகள் அன்னாரின் மகன் ஆ விவேகானந்தனின் இல்லத்தில் (இல. 60, இராசசிங்க வீதி, வெள்ளவத்தையில்) 21 - 07 - 96 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை. உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. முருகானந்தன்
(மகன்)

வட்டு. தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.
(42019)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்லாண்டா நகரில் பாதுகாப்பு தீவிரம்!

## குண்டு வெடிப்புக்கு பலநாடுகள் கண்டனம்

லண்டன், ஜூலை 29

சனிக்கிழமை அதிகாலை அட்லாண்டாவில் இடம் பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதும், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்ததும் தெரிந்ததே.

குண்டு வெடிப்பின்போது ஏற்பட்ட சிதறல்களினாலேயே ஏராளமானோர் காயம் அடைந்தனர் என்றும் —

குண்டு வெடிப்பை அடுத்து பலர் இரத்தம் ஓடிய நிலையில் கீழே கிடந்தனர் என்றும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேசமயம் அட்லாண்டாவில் ஒலிம்பிக் நகரில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவத்தை உலகத்தலைவர்கள் கண்டித்துள்ளனர்.

கோழைத்தனமான செயல் என்றும் —

உலக நாடுகள் ஒன்று சேர்ந்து இது போன்ற பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராட வேண்டும் என்றும் — அமெரிக்க ஜனாதிபதி பில்கிளிண்டன் தெரிவித்தார்.

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்ஸின், பிரிட்டிஷ் பிரதமர் மேயர், இந்திய பிரதமர் தேவகௌடா உட்பட பல நாடுகளின் தலைவர்களும் இதனைக் கண்டித்துள்ளனர். (இ-3)

## ஹெலி விபத்தில் 9 பேர் மரணம்

நைரோபி, ஜூலை 29

வடக்கு கென்யாவில் ஹெலி ஒன்று விபத்துக்குள்ளாகியதில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.

மாகாண கமிஷனரும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளும் இவ்விபத்தில் கொல்லப்பட்டனர்.

எத்தியோப்பிய எல்லைப்பகுதிக்கு சென்று கொண்டிருந்த சமயமே ஹெலி விபத்துக்குள்ளானது. (இ-3)

## வெள்ளையர் ஒருவரை பொலீஸ் தேடுகிறது

அட்லாண்டாவில் ஒலிம்பிக் நகரில் இடம் பெறும் ஒலிம்பிக் போட்டியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பாக வெள்ளை இனத்தைச் சேர்ந்த ஒருவரைப் பொலீஸார் தேடிவருகின்றனர்.

இக்குண்டு வெடிப்புக்கு எவரும் உரிமை கோரவில்லை, பொலீஸார் விசாரணையை முடுக்கிவிட்டுள்ளனர். பாதுகாப்பு நடவடிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

போட்டியைப் பார்க்கச் செல்லும் மக்களின் சகல உடைமைகளும் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

அதேவேளை— அட்லாண்டாவில் உள்ள பாதாள ரயில் நிலையத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக வந்த தொலைபேசி அச்சுறுத்தல் ஒன்றை அடுத்து அது மூடப்பட்டுள்ளது.

அட்லாண்டாவில் போட்டி நடக்கும் பகுதிகளில் குடியிருந்த பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். (இ-3)

## பலஸ்தீனருக்கு வேலைதேடி அரபாத் சவூதி பயணம்

பலஸ்தீனத் தலைவர் யாஸிர் அரபாத் சவூதி அரேபியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

மேற்குக் கரையுடனான எல்லையைஇஸ்ரேல் மீண்டும் மூடியதை அடுத்து ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் வேலை இழந்துள்ளனர்.

சவூதி அரேபியாவில் பலஸ்தீனர்களுக்கு வேலைகோரியே யாஸீர் அரபாத் சவூதி அரேபியா சென்றுள்ளார்.

இஸ்ரவேலில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது இரு இஸ்ரேலர்கள் கொல்லப்பட்டனர். இதனை அடுத்தே பலஸ்தீனர்களின் மேற்குக் கரையுடனான எல்லையை இஸ்ரேல் மூடியது.

மேற்குக்கரையில் இருந்து தினமும் இஸ்ரேலுக்கு தொழிலுக்காக வரும் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் எல்லை மூடப்பட்டதால் தற்போது வேலை இழந்துள்ளனர் (இ)

### ஒலிம்பிக்கில்

## அமெரிக்காவும் ரஷ்யாவும் மாறி, மாறி முன்னணியில்

அட்லாண்டா, ஜூலை 29

அட்லாண்டாவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களைப் பெறுவதில் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையில் போட்டி நிலவுகிறது.

மாறி மாறி இரு நாடுகளும் முதல் இடத்தைப் பிடிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

8 ஆவது நாள் இறுதியில் அமெரிக்கா 16 தங்கப்பதக்கங்களைப் பெற்றிருந்தது. ரஷ்யா 13 தங்கப் பதக்கங்களைப் பெற்றிருந்தது.

சீனா, பிரான்ஸ் ஆகியன தலா 7 தங்கப்பதக்கங்களைப் பெற்றிருந்தன. (இ-3)

### 100 மீற்றர் போட்டியில் உலகசாதனை

## அதிவேக ஓட்ட வீரராக கனடாவைச் சேர்ந்த பெய்லி

அட்லாண்டா, ஜூலை 29

ஒலிம்பிக் போட்டிகளில் ஆண்களுக்கான நூறு மீற்றர் ஓட்டத்தில் புதிய உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியதன் மூலம் உலகின் அதிவேக ஓட்ட வீரர் என்ற பெயரை கனடா நாட்டின் ஜொனதன் பெய்லி தட்டிச் சென்றார்.

அவர் நூறு மீற்றர் தூரத்தை 9.84 செக்கன்களில் ஓடி முடித்ததன் மூலம் 1991 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கார் லூயிஸ் 9.86 செக்கன்களில் இத் தூரத்தை ஓடி முடித்து நிலைநாட்டிய சாதனையை முறியடித்தார்.

தற்போதைய ஒலிம்பிக் போட்டிகளின் நூறு மீற்றர் ஓட்டத்தில் நமீபியா நாட்டின் தாங்கியூ பிரெடெரிக்ஸ் இரண்டாம் இடத்தையும் —

டிரினிடாட்டின் பேல்டன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

முன்னதாக நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் ஓட்டம் தொடங்கும் இடத்தில் சிறிது நேரம் இழுபறி இடம் பெற்றதாகச் செய்தி ஏஜென்ஸிகள் வர்ணித்தன.

தவறான தொடக்கம் காரணமாக இந்த ஓட்டப்போட்டி மூன்று தடவைகள் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த ஒலிம்பிக் போட்டிகளில் நூறு மீற்றரில் தங்கப்பதக்கம் பெற்ற பிரிட்டனைச் சேர்ந்த வீரர் லிங்குவிட் கிறிஸ்ரீ தவறாக இரண்டு முறை ஓட்டத்தை ஆரம்பித்ததற்காகப் போட்டியின் ஆரம்பத்திலேயே போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டார். [உ-3]

## கொரிய எல்லையில் கடும் மழை

கோல், ஜூலை 29

வடகொரிய— தென் கொரிய எல்லையில் கடும் மழை காரணமாக அப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கானோர் வெளியேறி உள்ளனர்.

வெள்ளம் காரணமாக 50 பேருக்கு மேல் இறந்துள்ளனர். 100-க்கும் அதிகமானோர் காயம் அடைந்துள்ளனர். (இ)

### துருக்கியில்

## உண்ணாவிரதத்தை கைதிகள் கைவிட்டனர்

துருக்கிச் சிறைகளில் இடம் பெற்று வந்த கைதிகள் உண்ணாவிரதம் முடிவுக்கு வந்துள்ளது.

சிறைச்சாலையில் உள்ள கைதிகள், அடிப்படைத் தேவைகள் எதுவும் இல்லாத நிலையில் மிகவும் மோசமான நிலையில் இருந்து வருகின்றனர் என்றும்—

சிறைச்சாலைகளில் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் — கைதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை அரசாங்கம் தற்போது கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்ததிலிருந்து 11 கைதிகள் இது வரை மரணமடைந்துள்ளனர்.

துருக்கியின் மேற்குப்பகுதியல் இருக்கும் புருடா சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இரவு ஒருவர் இறந்ததாகத் துருக்கிய மனித உரிமை அமைப்பு ஒன்று அறிவித்தது.

அதைத்தொடர்ந்து வேரம்பாசா என்ற சிறைச்சாலையில் இன்னுமொருவர் இறந்து விட்டதாக 'அனொத்தலி' செய்தி நிறுவனம் அறிவித்தது.

60 பேரின் நிலைமை மோசமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 10 வாரங்களுக்கு மேலாக நடந்து வரும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் 300-க்கும் மேலான கைதிகள் ஈடுபட்டிருந்தனர்.

# உலக அரங்கில்

## தேர்தல் சீர்திருத்த சட்டம் இந்திய நாடாளுமன்றில்

இந்தியாவில் ஐக்கிய முன்னணி அரசு தேர்தல் சீர்திருத்த சட்ட நகல் ஒன்றை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

நகலில் காணப்படும் முக்கிய அம்சங்கள் வருமாறு:

★ குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட வேட்பாளர்கள் 6 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட தடைவிதிக்கப்படும்.

★ தேர்தல் பிரசார காலம் 21 நாள்களில் இருந்து 14 நாள்களாக குறைக்கப்படும்.

★ வேட்பாளர்களின் வைப்புத் தொகை 5 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படும்.

★ உறுப்பினர்கள் யாராவது இறந்தால்இடைக் காலத் தேர்தல் ஆறு மாத காலத்தில் நடத்தப்பட வேண்டும்

★ தொகுதிகளின் தெரிவு கட்டுப்படுத்தப்படும்.

★ ஒரு வேட்பாளர் இரண்டுக்கு மேல் தொகுதியில் போட்டியிட தடை விதிக்கப்படும். (இ-3)

## ஸ்பெயின் விமானத்தைக் கடத்துவதற்கு முயற்சி

### லெபனான் இளைஞன் கைது

வாஷிங்டன், ஜூலை 28

அமெரிக்காவில் இருந்து 231 பயணிகளுடன் கியூபாவுக்கு சென்று கொண்டிருந்த ஸ்பானிய விமானம் ஒன்றைக் கடத்த நடந்த முயற்சி முறியடிக்கப் பட்டது.

நடுவானில் விமானத்தை கடத்த முயன்ற லெபனான் வாசியான சையிர் இப்ராகிம் என்றஇளைஞன் விமானத்தை குண்டு வைத்து தகர்க்கப் போவதாக மிரட்டினான்.

ஆனால் அமெரிக்க ஜெட் விமானங்களின் அதிரடி நடவடிக்கையினால் பயணிகள் விமானம் பாதுகாப்பாக தரை இறக்கப்பட்டது.

சையிர் இப்ராகிமிடம் வெடிகுண்டுகள் ஏதும் இருக்கவில்லை என்பதும் —

வெறும் உடைந்த ரேப் றெக்கோடரும், சவரம் செய்யும் கருவியும்தான் அவரிடம் இருந்தன என்றும் — பின்னர் கண்டுபிடிக்கப் பட்டது. (இ - 3)

## படை விலக்க இஸ்ரேல் தயார்

பெய்ரூட், ஜூலை 29

தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெறத் தயார் என்றும் —

ஆனால் வடக்கு இஸ்ரேலுடனான லெபனான் எல்லையில் இஸ்ரேலின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் இஸ்ரேலின் புதிய [illegible] அறிவித்துள்ளார். (இ)

## பெரும் எண்ணிக்கையான துருப்புகள் ஜகார்த்தா நகரில் குவிப்பு!

### 20 ஆண்டுகளில் மோசமான கலவரம்

ஜகார்த்தா, ஜூலை 29

வன்செயல்கள் வெடித்து ரணகளமாகத் திகழ்ந்த இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் பெரும் எண்ணிக்கையான துருப்புகள் குவிக்கப்பட்டதை அடுத்து நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

எதிரணியான ஜனநாயகக் கட்சியின் தலைமையகத்துக்குள் கலகம் அடக்கும் பொலீஸாரும், இராணுவத்தினரும் நுழைந்து அக்கட்டடத்தைத் தக்க வைத்திருந்த ஜனநாயகக் கட்சியின் ஒரு பிரிவுத் தலைவி [illegible] வாளர்களையும் வெளியேற்ற நடவடிக்கை எடுத்ததை அடுத்தே ஜகார்த்தாவில் பெரும் கலவரம் வெடித்தது.

கலவரங்களில் ஈடுபட்டோர் பல அரச கட்டடங்களுக்குத் தீவைத்தனர். படையினரின் வீடுகள் அமைந்திருந்த கட்டடத் தொகுதிகளும் எரிக்கப்பட்டன.

விவசாய அமைச்சின் ஒன்பது மாடி கட்டடங்கள்எரிந்து சாம்பராகின; ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

நூற்றியெழுபது பேர் வரை கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இருபது வருடங்களில் ஜகார்த்தாவில் இடம் பெற்ற மிகமோசமான கலவரம் இது என்று கூறப்பட்டது.

அரசாங்கத்தில் இருந்து சிறிது காலத்துக்கு முன்னர் வெளியேற்றப்பட்ட பின்னர் எதிரணி ஜனநாயகக் கட்சியின் தலைமைத்துவத்தை மேகவதி சுவர்ணபுத்திரி பொறுப்பேற்றிருந்தார்.

ஆனால் அண்மையில் அரசு சார்புக்குழு ஒன்று ஜனநாயகக் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து மேகவதியை வெளியேற்றியது. எனினும் கட்சியின் தலைமைக் கூட்டத்தைத் தமது ஆதரவாளர்களுடன் இணைந்து மேகவதி தக்க வைத்திருந்தார்.

அன்றிலிருந்து அவரும், அவரது ஆதரவாளர்களும் பொலீஸாராலும், படையினராலும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதை அடுத்தே ஜகார்த்தாவில் பெரும் எடுப்பில் கலவரம் வெடித்தது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அப்பாத்துரை ரமேஸ் ஆகிய எனது பல்கலைக்கழக பதிவேடு 24-07-96 இல் யாழ். பல்கலைக்கழகத்திற்கும், சோமசுந்தரம் அவனியு சுண்டிக்குளிக்கும், இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டு எடுப்பவர்கள் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளித்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். (41979)

சிவலிங்கம் சுபதா ஆகிய எனது விசேட அடையாள அட்டை (பலாலி வீதி, கோண்டாவில்) பலாலி வீதியில் திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் 26-7-96 அன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் சிவபாதம் ஸ்ரோர்ஸ், பலாலி றோட், கோண்டாவில் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (42009)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

ஒரு தொகைப் பணம் சங்கானைச் சந்தையில் அமைந்துள்ள எமது கடையில் தவறவிடப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாம். விலாசம்: லட்சுமி ஸ்ரோர்ஸ், சங்கானைச் சந்தை (சங்கானை மார்க்கட்), சங்கானைச் சந்தி, சங்கானை. (42007)

### கணனி வகுப்புக்கள்

கொம்பியூட்டர் அடிப்படை விளக்கங்கள் பற்றிய வகுப்புக்கள் இலவசமாக நடைபெறும். பல்கலைக்கழக புதிய (விஞ்ஞான) மாணவர்களிற்கு முன் உரிமை வழங்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். ஆரம்பம்: 9-8-96 காலை புதிய நேரம் 10-00 மணி. Computer Science Academy, Thirunelvely. (சி-2681)

### விண்ணப்பப்படிவம்

மத்திய வங்கிப் பதவிக்கான படிவம் விற்பனையாகிறது. தபாலில் பெற விரும்புவோர் முத்திரை ஒட்டிய சுய விலாசம் எழுதிய கவருடன் ரூபா 5/- பெறுமதியான முத்திரை அனுப்பவும். படிவமும் விவரமும் அனுப்பப்படும். நாயகபாலன் புத்தகக் களஞ்சியம், மானிப்பாய். (42000)

### வாங்கப்படும்

பழைய நாவல் புத்தகங்களும், புராணப் புத்தகங்களும் நியாய விலையில் வாங்கப்படும். தொடர்பு: பாலா ஸ்ரோர்ஸ், சரசாலை றோட், மட்டுவில். (41987)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா வாத நோய்கள், வலிப்பு நோய், மாதவிடாய்க் குத்து, குழந்தை வைத்தியம், மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (41747)

### புலமைப் பரிசில் 95

14-7-96 அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆண்டு 5 புலமைப் பரிசில் விசேட பரீட்சை வினாத்தாள்களை எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வெளியீடு: Bond, யாழ்ப்பாணம். (41990)

### விற்பனைக்கு

நல்ல இன தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பாலா ஸ்ரோர்ஸ், சரசாலை றோட், மட்டுவில். (41986)

### புலமைப் பரிசில் 96

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடப்படுகின்றன. அடுத்த (10வது) வெளியீடு 28-7-96 Bond Institute 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (41989)

---

## நல்லூர் பிரதேசத்தில்

விடியும் வேளை

## "உதயன்"

நாளிதழை வீடுகளில் பெறவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்க:

**ஏ.எம்.ஆர். ஸ்தாபனம்,**
186, கோயில் வீதி,
முடமாவடி,
நல்லூர்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
திரு. செ. தேவராஜனின் அன்புத் தாயார்
திருமதி
**செல்லத்துரை சிரோன்மணி**

27-07-1996 சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார். அன்னாருக்கு எமது இதயம் கனிந்த கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

உப அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.
மானிப்பாய் இந்துக் கல்லூரி

(42011)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

**அமரர் கா. சபாரத்தினம்**
(பலுகாடு, காரைநகர்)

மறைவு: 29 06-96

இரண்டு தசாப்தங்கள் காரைநகர், கருங்காலி போசுட்டி முருகன் ஆலய அறங்காவலராகச் சிறப்பாகப் பணிபுரிந்த சபாரத்தினம் ஐயாவின் ஆத்மா போசுட்டி முருகனின் திருவடியை அடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


ஸ்ரீசண்முகானந்தசபை

போசுட்டி, காரைநகர். (41998)

---

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

படைப்பு: 07 – 01 – 1936



அழிப்பு: 21 – 07 – 1994

**அமரர் தம்பு துரைராசா**

திதி: 29 – 07 – 1996

பன்னீர் இரண்டு மாதங்கள் கண்ணீரில்
கரைந்ததையா
நிதமும் நிகமும் நிகழ்வுகள் நினைவலையாய்
மாறுதையா
நிதமும் உம் நினைவுகள் நீங்காத துயரில்
ஆழ்த்துதையா
நீங்கள் நினைத்தபடி நல்லவராய் வல்லவராய்
நாம் பல்லாண்டுகள் வாழ்ந்திட நல்லாசிகள்
பல பொழிந்திடுவீர்.

நீங்காத நினைவுடன்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு. (41890)

---

# கிராம உத்தியோகத்தர் அலுவலகம் கட்ட காணி

## பொது நிர்வாக அமைச்சு வழங்கும்

கொழும்பு, ஜூலை 29

கிராம உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்கள் கட்டுவதற்கு பொது நிர்வாக அமைச்சு காணிவழங்கத் திட்டமிட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் திறமையாகச் செயற்பட வேண்டியிருப்பதால் அவர்களுக்கு பொலீஸ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்க தெரிவித்தார்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாய உத்தியோகத்தர்கள் போன்ற கிராம மட்டத் தலைவர்களுடன் இவர்களும் இணைந்து பணியாற்ற வேண்டியிருப்பதால் அவர்கள் தமது கடமையை மேலும் பொறுப்புடன் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தினார். (இ-3)

---

### துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன்

# இனம் தெரியாத சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 29

வல்லை பிரதான வீதியில், நேற்று முன்தினம் அனாதரவான நிலையில் கிடந்த இனந்தெரியாத ஒருவரின் சடலம் நேற்று அவரது மனைவியால் அடையாளம் காணப்பட்டது.

சடலம் அடையாளம் காணப்படுவதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டிருந்தது. சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயம் காணப்பட்டது.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த செல்லத்துரை சிவானந்தம் (வயது 35) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

வல்லை கடற்பகுதிக்கு மீன்பிடித் தொழிலுக்காகச் சென்று கொண்டிருந்த வேளையே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

---

# பாடசாலையை மீண்டும் திறக்கக் கோரிக்கை

அச்சுவேலி, ஜூலை 29

அச்சுவேலி பத்தமேனி ஸ்ரீவிபசி வித்தியாலயத்தை மீண்டும் திறந்து அதனை செயற்பட வைக்குமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பத்தமேனி ஸ்ரீவிபசி வித்தியாலயம் அண்மையில் தற்காலிகமாக மூடப்பட்டு அதிபரும் இடமாற்றம் செய்யப்பட்டார்.

வித்தியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டதை ஆட்சேபித்த பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலையை மீண்டும் திறந்து அது செயற்பட ஆவன செய்யுமாறு கோரியுள்ளது.

பெற்றோரின் தாதுக்குழு ஒன்று வலயம் இரண்டு கல்விப்பணிப்பாளர், கோப்பாய்க் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆகியோரைச் சந்தித்து தமது கோரிக்கையை வலியுறுத்தியது. (இ-11)

---

# காயமடைந்த டாக்டர் கொழும்பில் மரணமானார்

யாழ்ப்பாணம், ஜூலை 29

கடந்த 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நடந்த தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தின் போது தலையில் காயமடைந்து கொழும்பில் சிகிச்சை பெற்று வந்த டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் கடந்த 26 ஆம் திகதி காலமானார்.

குருநகர்ப் பகுதியில் தனியார் வைத்தியசாலை நடத்தி வந்த இவர் அப்பகுதியில் பல சமூகப்பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

வடமாகாண கடற்றொழில் கூட்டுறச் சங்கத்தின் பணிப்பாளராகப் பணியாற்றிய இவர் யாழ். மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றினார்.

1995 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த பின்னர் இவர் இங்கு தங்கியிருந்து, இங்குள்ளவர்களுக்கு இலவச சிகிச்சை அளித்து வந்தார். (இ-3)

---

# சாவகச்சேரியிலும் மண்எண்ணெய்

## வாகனங்களுக்கு விநியோகம்

சாவகச்சேரி, ஜூலை 29

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 26ஆம் திகதி தொடக்கம் வாகனங்களுக்கு மண் எண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது.

அன்றைய தினம் நண்பகல் வரைசுமார் 50க்கு மேற்பட்ட வாகனங்களுக்கு மண்எண்ணெய் நிரப்பப்பட்டதாக எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் திரு. சி. குலேந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒரு லீற்றர் மண்எண்ணெய்- 12 ரூபா 55 சதப்படி வழங்கப்பட்டு வருகின்றது).

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மூலம் பளை, கொடிகாமம், சாவகச்சேரி கைதடி, நாவற்குழி ஆகிய இடங்களை உள்ளடக்கிய பகுதிகளில் உள்ள வாகனங்களுக்கு மண்எண்ணெய் வழங்கப்படும். (இ-31)

### ரியூப் ஒட்டும் கட்டணம் குறையவில்லை

சைக்கிள் ரியூப் ஒட்டும் பொருள்களான சொலுசன், கொம்பவுண்ட் ஆகியவற்றின் விலைகள் பெருமளவு குறைந்துள்ள போதிலும் சைக்கிள் ரியூப் ஒட்டுவதற்குரிய கட்டணம் குறைக்கப்படாதது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ரியூப் ஒட்டுவதற்குரிய பொருள்கள் தட்டுப்பாடாக இருந்தவேளையில் ஒரு ஒட்டுக்கு 20 ரூபா அறவிடப்பட்டது.

ஆனால் தற்போதும் 15 ரூபா முதல் 20 ரூபா வரை அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## ஊனமுறுவோர் பெருகலாமா?

கொழும்புத்துறைப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதி வெடிகளில் கால் நடைகள் பலவும் இறந்துள்ளதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

கொழும்புத்துறையில் மட்டுமல்ல, யாழ்ப்பாண நகரப் பகுதியில் அனேகமாக எல்லா இடங்களிலும் மிதி வெடி ஆபத்து இருக்கவே செய்கிறது. வலிகாமம் கிழக்கு, வலிகாமம் வடக்குப் பிரதேசங்களிலும் வீடுகள், வீதிகள், வயல்கள் என்று எல்லா இடங்களிலும் மிதிவெடிகள் மக்களைப் பயமுறுத்தி வருகின்றன.

எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பு இருக்குமோ என்று கூறுவது போல, இப்போது எந்த இடத்தில் புதைந்து கிடந்து எந்த மிதி வெடி கால்களைக் கொண்டு போகுமோ என்று அஞ்சும் காலமாக இது மாறியுள்ளது.

வலிகாமப் போரின் போது புதைத்து வைக்கப்பட்ட மிதிவெடிகள் இதுவரையில் பல பொதுமக்களின் கால்களைப் பறித்து விட்டன. அவர்களை ஊனமுற்றோர் வரிசையில் சேர்த்து விட்டன. இன்னும் சிலரின் உயிர்களைக் காவியதும் உண்டு.

போரின் பாதக விளைவுகளில் ஒன்றாக மிதிவெடிகளின் ஆபத்து குடாநாட்டு மக்களை தொடர்ந்தும் பயமுறுத்தி வருகிறது. அங்கத்திலே குறைவுள்ள மக்களின் எண்ணிக்கையைப் பெருக்கி, ஊனமுற்றோர் சமூகம் ஒன்று உருவாகும் வேதனைக்குரிய நிலை முளைக்கிறது.

போரில் ஈடுபடும் இருசாராரும் கை, கால்களை இழந்து ஊனமுற்ற சமுதாயமாக மாறுவது விரும்பத்தக்கதல்ல.

அதற்கு மேலதிகமாக அப்பாவிப் பொதுமக்கள் வீடுகளில், வீதிகளில், வயல் வெளிகளில் தமது வாழ்க்கைக் கடமைகளை, தொழில்களைச் செய்யும்போது ஊனமுறுவது எதிர்காலச் சமுதாயத்தில் சொல்லிலடங்காத பாதிப்பை உண்டாக்கப் போகிறது. மிதிவெடிகளால் தாக்குண்டவர்களின் வாழ்க்கையில் நிரந்தர அவலம் குடிகொண்டுவிடும்.

எனவே, வலிகாமத்தில் — குறிப்பாக யாழ்ப்பாண நகரத்தில் — புதையுண்டுள்ள மிதி வெடிகளை அகற்றுவதை ஒரு சமூகப் பணியாகக் கருதி இராணுவத்தினர் அதில் மேன்மேலும் அக்கறை கொள்வது நல்லது.

யாழ்ப்பாண நகரிலும், சண்டை நடைபெற்ற ஏனைய பகுதிகளிலும், இன்னும் பல வீடுகளில் மக்கள் குடியிருக்கத் தொடங்கவில்லை. மக்கள் குடியமர்ந்த வீடுகளில் பலவற்றில் கூட அவை முற்றாகத் துப்புரவு செய்யப்படவில்லை. இவற்றை இனங்கண்டு மிதிவெடிப் பரிசோதனை செய்வதன் மூலம் மேலும் பலர் ஊனமுறுவதைத் தடுக்க முடியும்.

மிதி வெடிகளால் வாழ்க்கையில் பின்தள்ளப்படும் மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கும், விசேட சமூக நலன் திட்டங்கள் மூலம் அவர்களுக்கு உதவுவதற்கும் இப்போதே வகை செய்யப்படவேண்டும்.

போரின் கொடுமைச் சுவடுகளை அழியவிடாது நினைவூட்டிக் கொள்ளப் போகும் ஊனமுற்றோர் பிரிவினரின் வாழ்க்கை மேம்பாட்டுக்கு இப்போதிருந்தே நீண்டகால, தூரப் பார்வையுள்ள செயற்பாடுகள் மலரவேண்டும்.

# முல்லையில் நடந்தவற்றை அரசு மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்

## சபையில் ரணில் கோரிக்கை

முல்லைத்தீவு முகாம் விடுதலைப்புலிகளால் தரைமட்டமாக்கப்பட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிரழிவுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இது தொடர்பான உண்மை நிலைவரத்தை நாட்டு மக்களுக்கு அரசாங்கம் தெரியப்படுத்த வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றினார். அவரின் உரையின் முக்கிய விவரங்கள் தற்போது கிடைத்துள்ளன.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

முல்லைத்தீவில் தரையிறங்க முற்பட்ட கடற்படைப்படகுகள் அழிக்கப்பட்டுள்ளன; ஹெலிகள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன.

ஜனாதிபதி குமாரதுங்கவும். அரசும் உண்மையிலிருந்து தப்பிவிட முடியாது. உண்மை நிலைவரத்தை வெளியிட்டால் அதன் பின்னர் என்ன செய்யலாம் எனப் பேசித் தீர்மானிக்கலாம். மாறான விதத்தில் தகவலை வெளியிடுவீர்களாயின் பின்பு உலகு எதையுமே நம்பாது.

### தணிக்கையை நீக்குவீர்களா?

வெகுசனத் தொடர்பு சாதன அமைச்சர் பத்திரிகைத் தணிக்கையை நீக்குவதாகக் கூறினார். ஆனால் நீக்கப்படவில்லை. பி.பி.ஸி. மூலம் பல செய்திகளை மக்கள் அறிந்து கொள்கின்றனர்.

### ரத்வத்தை எங்கே?

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் முல்லைத்தீவில் இருப்பதாகச் செய்தியில் கூறப்பட்டது. ஆனால் அவர் திருமலையில் இருப்பதாகத் தெரிகின்றது. உங்கள் பிரசார நடவடிக்கைகள் கடத்த 3, 4 மாதங்களாக வெற்றியளிக்கவில்லை.

12 மாதங்களில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்று கூறினீர்கள், ஆனால் யுத்தம் பன்முகப் படுத்தப்பட்ட தன்மையே காணப்படுகின்றது

கடந்த 12 மாதமாக யாழ். குடாநாட்டில் மட்டுமே கவனத்தைத் திருப்பியதால் புலிகள் கிழக்கிலும் முல்லைத்தீவிலும் தம்மை ஸ்திரப்படுத்தி உள்ளனர்.

இன்று ஐயாயிரம்சதுரமைல் பரப்பளவுப் பகுதியைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். ஐயாயிரம் கோடி ரூபா யுத்தத்துக்குச் செலவழிக்கப்படுகின்றது. இவ்வாறு எவ்வளவு காலத்துக்கு யுத்தத்தை நீடித்துச் செல்வீர்கள்? பன்னிரண்டு மாதத்துக்குள் இதனை முடிவுக்குக் கொண்டு வராவிட்டால் பாரிய நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும் என ஜனாதிபதியே கூறியுள்ளார்.

### இறுதி முடிவை எடுப்பது யார்?

இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக யார் இறுதி முடிவை மேற்கொள்கிறார்கள்? கூட்டு நடவடிக்கை பிரிவுத் தளபதி அவசியம் தேவையான பதவியாகும். பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், ஒரு போதுமே களத்தில் உள்ள தளபதிகள், கூட்டுப் படைத் தளபதிகள் போன்றோருக்கு பதிலீடாக அமைய மாட்டார்.

நீங்கள் யுத்தத்தை அரசியல் மயமாக்குகின்றீர்கள். யுத்த விடயங்களை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பாதுகாப்பு அமைச்சருக்குத் தெரியப்படுத்தவேண்டும். பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி, அமைச்சரவை, பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்குழு ஆகியவற்றுக்கும், பாதுகாப்புச் சபைக்கும் விடயங்களைத் தெரியப்படுத்தி ஆலோசிக்கலாம்.

ஆனால் பாதுகாப்புச் சபையே இயங்குவதில்லை. எதிர்க்கட்சித் தலைவரிடம் இந்த விவகாரம் தெரியப்படுத்தப்படுவதில்லை. படைகளை யுத்தத்துக்கே உபயோகப்படுத்தவேண்டும்.

இராணுவ, கடற்படை, விமானப்படைத் தளபதிகளுக்கு இடையில் உடன்பாடு இல்லாவிடில் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தீர்மானங்களை எடுப்பதும் கடினமாகும். அதற்காகவே கூட்டுப்படைத் தளபதி அவசியம் எனக் கருதுகின்றோம்.

மேலும் ஆயுதக் கொள்வனவு தொடர்பாக அமைச்சரவை உபகுழு ஒன்னற நியமிக்கவேண்டும்.

### முல்லைச் சம்பவம்: விவாதம் தேவை

முல்லைத்தீவுச் சம்பவம் தொடர்பாக அடுத்த வாரம் பெரியதொரு விவாதம் நடத்தப்பட வேண்டும் என நாம் கோருகின்றோம். பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர் இச்சபையில் பிரசன்னமாகியிருக்க வேண்டும். நாடாளுமன்றமே அதி உயர் ஸ்தானமாகும். படைகளுக்கான நிதிஒதுக்கீடும் சபையின் அங்கீகாரத்துடனேயே இடம் பெறுகின்றது. ஆகவே பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்துக்குப் பதிலளிக்க வேண்டும்.

மறைந்த இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி கூட யுத்தகளத்துக்குச் சென்றாலும் அவ்வப்போது சபையில் சமூகமளித்து நாட்டின் பாதுகாப்பு விவரங்கள் குறித்து சபைக்கு அறிவித்து வந்தார்.

நாம் ஒன்றுபட்டு தேசிய நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமாயின் உண்மை நிலைவரத்தை நாட்டுக்குத் தெரியப்படுத்துவது அத்தியாவசியமானதாகும் —என்றார். (உ)

## காக்கைதீவில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், காக்கைதீவுக் கடற்பிராந்தியத்தில் மீன்பிடிப்பதற்காகச் சென்றவர்களில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

நேற்றுக்காலை 6 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

சுதுமலை தெற்கு சாவற்காட்டைச்சேர்ந்த செல்லத்துரை இராமநாதன்(வயது38) என்பவரே மரணமானவராவார்.

கடலில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இவர் ஆபத்தானநிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட வேளையிலேயே அங்கு அவர் மரணமானார்.

அவருடன் கூடச்சென்ற ஏனையவர்கள் பதினொரு பேர் திரும்பி வரவில்லை எனவும், அவர்களுக்கு என்ன நடந்தது என தெரியவரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது (இ-15)

## பிரதேச செயலகங்களுக்கு ரொக்கப் பரிசு, பதக்கம்

நாட்டில் உள்ள மிகச் சிறந்த பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கு ரொக்கப் பரிசுகளும், பதக்கங்களும் வழங்கப் படவிருக்கின்றன.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல இதனைத் தெரிவித்தார்.

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் பிரதேச செயலகங்கள் தேசிய மட்டத்தில் போட்டியிடுவதற்கு தகுதி பெறும்.

பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன் அரச ஊழியர்கள் தமது முழுத்திறமையைக் காட்டவும் அவர்களை ஊக்குவிக்கவும் இந்த நடவடிக்கை ஏற்படுத்தப்படுகிறது.

அடுத்த சில மாதங்களுக்குள் இந்தப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப் பட விருக்கின்றன. (இ-3)

### மத்திய வங்கி குண்டு வெடிப்பு:

## தடுத்துவைக்கப்பட்டோரில் மேலும் இருவர் விடுதலை

கொழும்பு, ஜூலை 29

மத்திய வங்கி குண்டு வெடிப்பு சம்பந்தமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த வர்களில் மேலும் இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் உள்ள அரிசி ஆலை ஒன்றின் முகாமையாளர் சுப்பிரமணியம் சண்முகலிங்கம், அந்த ஆலையின் தற்போதைய உரிமையாளர் சண்முகம் ஆனந்தராஜா ஆகிய இருவருமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

### சமய நிகழ்வுகளில்

அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலய தேர் உற்சவம் இன்று நடைபெறுகிறது

நாளை தீர்த்த உற்சவம் நடைபெறும். (இ-3)

## வலி - வடக்கு மக்கள் மீளக்குடியமர உதவுக!

கடந்த 25-07-96 இல் உதயன் பத்திரிகையில் வெளியாகிய ''அரியாலை கிழக்குப் பகுதியில் மக்கள் மீண்டும் வசிக்க அனுமதி; அரச அதிபரின் முயற்சி வெற்றி'' என்ற தலைப்பிலான செய்தியை வாசித்தறிந்தோம். இது விடயத்தில் அரச அதிபரின் முயற்சி பாராட்டுக்குரியது.

இதேவேளை, ஆறு வருடகாலமாக இடம்பெயர்ந்து அங்குமிங்குமாக அலைந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ள வலி. வடக்கு மக்களின் நிலைமையைப் பற்றியும் அரச அதிபர் அக்கறை கொள்ளவேண்டும் என விரும்புகிறோம்.

தற்போதைய சூழ்நிலையில் அரச அதிபரின் கடமைப் பளுவை எம்மால் ஓரளவு அறிய முடியும். இருப்பினும் ஆறு வருடமாக இடம்பெயர்ந்து இன்னமும் பிறரின் வீடுகளில் தங்கி, எமது வீடுகளையோ, நிலங்களையோ பார்க்காது இருக்கின்ற எங்கள் மீளக் குடியமர்வு தாமதிக்கக் கூடிய ஒன்றல்ல.

### வாசகர் திருமுகம்

வலி. வடக்கு மக்களாகிய நாம் இது விடயத்தில் எங்களால் ஆன சகல முயற்சிகளையும் மேற்கொண்டோம்; பலன் கிட்டுவதாக இல்லை.

வலி. வடக்கு பிரதேச செயலர் ஊடாக எமது பிரச்சினையை எமது அரச அதிபருக்கு எடுத்துக் கூறும்படியும் கேட்டு மாதங்கள் இரண்டு ஆகி விட்டன.

ஆறு வருடமாக இடம்பெயர்ந்து அவலமுறும் வலி-வடக்கு மக்களாகிய எங்களின் இதயங்கள் வேதனைச் சுமையால் வாடுகின்றன.

சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளையும் இது விடயத்தில் அக்கறை கொண்டு, காலந்தாழ்த்தாது எங்களுக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

க. மணிவண்ணன்

தையிட்டி.

யாழ். அரச அதிபரின் முயற்சியால் அரியாலை கிழக்குப் பகுதி மக்கள் கடந்த சுமார் ஒன்பது மாதங்களின் பின் தமது சொந்த இடங்களில் குடியேற்றப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி 25-07-96 உதயனில் வெளியாகியிருந்தது. இது மகிழ்ச்சியான விடயமாகும்.

இந்தச் செய்தியைப்படிக்கும் ஒவ்வொரு வலி. வடக்குப் பிரதேச குடிமகனும் ஏக்கப் பெருமூச்சு விடுவான் என்பதில் ஐயமில்லை. கடந்த ஆறு வருடங்களாக இடம்பெயர்ந்த நிலையில் வாழும் இம்மக்கள் தமக்கு உதவுமாறு அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

ஆனால் இது தொடர்பாக இதுவரை எந்த ஆக்கபூர்வ நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் கூடிய அக்கறை எடுக்க வேண்டுகிறோம். அதன் மூலம் ஆயிரக் கணக்கான மக்களை வாழ வைத்த பெருமை அவர்களைச் சாரும்.

ஜெ. பிரதீபன்

கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தணிக்கை மூலம் உண்மைகளை மறைக்க முயல்வது ஆபத்தாகும்!

## தமிழ்த் தினசரி எச்சரிக்கை

''மக்களுக்கு உண்மைகளை மறைப்பதற்கான ஒரு கருவியாக அரசாங்கம் தணிக்கையைப் பயன்படுத்த முற்படுவது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும்".

— கொழும்புத் தமிழ்த் தினசரி ஒன்று தனது ஆசிரிய தலையங்கத்தில் இவ்வாறு எச்சரித்திருக்கின்றது. கடந்த சனியன்று பிரசுரமான இந்தத் தினசரியின் ஆசிரிய தலையங்கத்தில் கூறப்பட்டிருந்ததாவது:-

செய்தித்தணிக்கை இந்நாட்டு சட்ட திட்டங்களில் நிரந்தரமான ஓர் இடத்தைப் பிடித்து விட்டது போலுள்ளது, இந்நாட்டு மக்களுக்கு எதனைத் தெரிவிக்கலாம், எதனைத் தெரிவிக்கக்கூடாது என்பதைத் தணிக்கை அதிகாரிகளே இன்று தீர்மானிக்கின்றார்கள்.

தணிக்கையை அமுல் செய்வதும் நடைமுறைப் படுத்துவதும்தான் தனது கடமையே தவிர அதனை நீக்குவதற்கான அதிகாரம் தனக்கு இல்லை என வெகுஜனத் தொடர்பு சாதன அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

பல மாத காலமாகத் தொடரும் இந்தத் தணிக்கை மக்களை இருட்டில் வைத்துள்ளது. நாட்டில் என்ன நடக்கின்றது என்பதை அறிவதற்கான மக்களுடைய அடிப்படை உரிமை தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவுத் தாக்குதலைத் தொடர்ந்து தணிக்கை நீக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பலமாகக் குரல் கொடுத்திருக்கின்றார். மக்களிடமிருந்து எதனையும் மறைக்க முயலக்கூடாது என்பதையும் அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

தணிக்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட போது அதனை நியாயப்படுத்துவதற்கான பல்வேறு காரணங்கள் அரசாங்கத்தால் கூறப்பட்டது. அரசாங்கத்தின் இராணுவ இரகசியங்கள் எதிரிகளிடம் சென்றடைவதைத் தடுப்பதற்காகவே இந்தப் பத்திரிகைத் தணிக்கை என அரசாங்கம் தெரிவித்தது.

ஆனால் இராணுவ இரகசியங்கள் மட்டுமன்றி மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டிய பல்வேறு செய்திகள், தகவல்கள் இன்று தணிக்கைக்கு இரையாகுகின்றன. இதனையிட்டு தன்னுடைய தெளிவான நிலைப்பாட்டை அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை.

தணிக்கையிலும் பல்வேறு பாகுபாடுகள் காட்டப்படுகின்றன. ஒரு பத்திரிகையில் வெட்டப்படும் பகுதி மற்றொரு பத்திரிகையில் வெளியாவதாகப் பல குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

தெகிவளைக் குண்டு வெடிப்பின் அனர்த்தங்களைப் பத்திரிகைகள் அனைத்தும் படங்களுடன் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருக்கின்றன. இந்தச் செய்திகள் எந்த வகையிலும் தணிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை.

ஆனால், வடபகுதியில் ஷெல் தாக்குதல்களால் பலியானவர்கள் தொடர்பான விவரங்கள் தணிக்கை அதிகாரிகளினால் வெட்டப்பட்டிருக்கின்றன. இதனால் வடக்கில் என்ன நடக்கின்றது என்பதை அறிந்து கொள்ளமுடியாத நிலைமை ஏனைய பகுதியிலுள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தணிக்கைக்கு அரசாங்கம் கொடுத்துள்ள சமாதானத்தையிட்டு மக்கள் மத்தியில் சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. உண்மைகளைத் திரைபோட்டு மூடி விடுவதற்கான ஓர் ஆயுதமாக மட்டும் தணிக்கையை அரசு பயன்படுத்துகின்றது என்ற குற்றச்சாட்டுக்கள் இதனால் எழுகின்றன.

தேசிய நலன்களின் அடிப்படையில் தணிக்கையைப் பயன்படுத்துவது தவறானதல்ல. ஆனால் மக்களுக்கு உண்மைகளை மறைப்பதற்கான ஒரு கருவியாக அரசாங்கம் இதனைப் பயன்படுத்த முற்படுத்துவது ஆபத்தான விளைவுகளைத் தான் ஏற்படுத்தும்


யாழ். பல்கலைக்கழக

(வெளிவாரி)

B·A· Final B·A· Part - I

மேற்குறிப்பிட்ட மாணவர்கள் பரீட்சை சம்பந்தமாக வந்து சந்திக்கவும்.

காலம்:- 30-07-96 காலை 9 மணி

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

நிர்வாகி: S. அருள்நங்கை (42013)


## மரண அறிவித்தல்

### வைத்திய கலாநிதி A·L· ஏபிரகாம்

வைத்திய கலாநிதி A. L. ஏபிரகாம் அவர்கள் 26-7-96 கொழும்பில் காலமானார்.

அன்னார் ஜொய்சியின் அன்புக் கணவரும், கிறிஷாந்தி, நிலாந்தி, தர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராயப்பு யோசவ்வின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பில் அடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
அருட்திரு.
ஜெயசீலன் அடிகளார்
102, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (42010)

மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

## மிதிவெடியில் சிக்கிய மாடு காலை இழந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 29

மிதிவெடியில் சிக்கிய மாடு முன்னங்கால் ஒன்றை இழந்தது. மாட்டைப் பிடித்துச் சென்றவர் படுகாயமடைந்தார்.

ஊரெழுவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் அந்த இடத்தைச் சேர்ந்த பஞ்சலிங்கம் விஸ்ணுகரன் (வயது 15) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தோட்டத்தில் மேயக்கட்டிய மாட்டை, வீட்டுக்கு அவிழ்த்துச் சென்றவேளையே தோட்டப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றதாக காயமடைந்தவரால் தெரிவிக்கப்பட்டது.

## மாட்டு வண்டி குடை சாய்ந்து இருவர் மரணம்

கிளிநொச்சியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த சமயம் மாட்டு வண்டி ஒன்று குடைசாய்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பெண்கள் நசியுண்டு உயிரிழந்ததாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

## வர்த்தக திணைக்கள கிளை

யாழ்ப்பாணம், ஜூலை 29

வர்த்தகத் திணைக்களத்தின் சில்லறை விற்பனைக் கிளைக்கடை ஒன்று கொக்குவிலில் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது.

கொக்குவிலில் சம்பியன் ஒழுங்கைக்கு அருகாமையில் கே. கே. எஸ் வீதியில் இப்புதிய கிளை திறக்கப்பட்டுள்ளது.

கொக்குவில், கோண்டாவில் பகுதி பாவனையாளர்கள் இதன் மூலம் நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை இணுவில் பகுதியிலும் ஏற்கனவே ஒரு வர்த்தகத் திணைக்களத்தின் கிளை திறக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ-4)

### வவுனியா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டது.

வவுனியாவில் நிரந்தரமாக வசிப்பவர்களும், அரச சேவையாளர்களும் இந்த விசாரணையிலிருந்து நேற்று விலக்களிக்கப்பட்டது. (உ-3)

### பரந்தனில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வல் இல்லை.

புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்துவதாகவும், படையினர் பதில் தாக்குதல் நடத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-10)

## குண்டு வெடிப்பில் பலர் பலியாக அழகு ராணியை முத்தமிட அமைச்சர் முண்டியடிப்பு

### கவலைக்குரியது என்கிறார் அஸ்வர்

கொழும்பு, ஜூலை 29

''நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்கெட்டு ஆங்காங்கே குண்டுகள் வெடித்து நூற்றுக்கணக்கில் மக்கள் பலியாகிக் கொண்டிருக்கின்ற நிலையில் அமைச்சர்கள் உலக அழகு ராணிகளை முத்தமிட முண்டியடித்துக் கொண்டு செல்கின்றனர்''.

— ஐ. தே. கவின் எம். பியான ஏ. எஸ் எம். அஸ்வர் கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு குறை கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் சமாதானத்தை ஏற்படுத்துவதாக வாக்குறுதிகளை அள்ளி வழங்கியது.

ஆனால் இப்போது சமாதானத்திற்குப் பதிலாக நாட்டில் குண்டுகள் வெடித்துக் கொண்டிருக்கின்றன.

தெகிவளையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் மனிதாபிமானமற்ற வகையில் பலர் கொல்லப்பட்டனர். இது இப்படியிருக்க, உலக அழகுராணியுடன் சிலர் கொஞ்சியதை அண்மைக்கால பத்திரிகைகளில் கண்டோம்.

இந்நாட்டில் சமூக கலாசாரம் இந்த நிலைமைக்குச் சென்றிருப்பது கவலைக்குரியது — என்றார். (உ)

## அ.தி.மு.கவிலிருந்து மேலும் இருவர் நீக்கம்

சென்னை, ஜூலை 29

அ. தி. மு. கவிலிருந்து மேலும் இருவர் நீக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் பா. குழந்தைவேலு, முன்னாள் மாணவர் அணிச் செயலர் ஐசரி கணேஷ் ஆகியோரே அந்த இருவரும் ஆவர்.

இவர்கள் இருவரும் அ. தி. மு கவின் கட்டுப்பாட்டை மீறி கட்சிக்கு அவப்பெயரை உண்டாக்கும் வகையில் செயல்பட்டதாகக் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்களான எஸ்.டி.சோமசுந்தரம், கண்ணப்பன், அரங்கநாயகம் ஆகியோர் கடந்த வாரம் கட்சியில் இருந்து நீக்கப்பட்டது தெரிந்ததே. (இ-3)

### நிபந்தனைகளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டால் மட்டுமே மூன்றாம் தரப்பு நாடுகளின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்துப் பரிசீலனை செய்யப்படும்.

விடுதலைப் புலிகளின் ஒரே இலக்கு தனிநாடு அமைப்பதே. அந்தக் கோரிக்கைக்கு அரசு ஒரு போதும் இணங்க முடியாது. அனுமதிக்கவும் முடியாது.

அதே போல யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகள் திரும்பப் பெறுவதற்கு இராணுவமும் அனுமதிக்காது.

இராணுவத்தினரின் மனோபலம் இப்போது அதிகமாகி உள்ளது. இப்போதைய இராணுவம் ஒழுக்கக் கட்டுப்பாடு நிறைந்தது.

#### வெளிநாட்டு பயிற்சி இல்லை

இலங்கை இராணுவம் எந்த வெளிநாட்டு இராணுவத்திடமும் போர்ப் பயிற்சி பெறவில்லை. ஆனால் அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளுடன் பயிற்சித் திட்டங்கள் உண்டு.

முல்லைத்தீவுத் தளத்தை இழந்து விட்டதால் அரசின் ஒட்டுமொத்தமான போர்த் திட்டத்தில் பின்னடைவு ஏற்படவில்லை.

வெளிநாடுகளிலிருந்து விடுதலைப் புலிகள் எப்படியோ கோடிக்கணக்கான நிதியைச் சேகரித்து விடுகிறார்கள், வெளிநாட்டு அரசுகளிடம் விடுதலைப் புலிகள் நிதி சேர்ப்பதை தடை செய்யுங்கள் என நாங்கள் பலமுறை கேட்டுக் கொண்டோம். விடுதலைப் புலிகள் சட்டத்திற்கு மாறாக ஒன்றும் செய்யவில்லையே என அந்த நாடுகள் கைவிரித்து விடுகின்றன. திரட்டிய நிதியைக் கொண்டு புலிகள் ஆயுதங்கள் வாங்கியதை நிரூபித்துக் காட்டுங்கள் என வெளிநாட்டு அரசுகள் எங்களுக்கு கூறுகின்றன. ஆனால் எங்களால் நிரூபிக்க இயலவில்லை — என்றார். (அ-3-10)

## 2 ஆம் தவணை விடுமுறை ஆகஸ்ட் 30 இல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். குடா நாட்டின் அரசாங்கப் பாடசாலைகள் அனைத்தும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக ஆகஸ்ட் 30 ஆம் திகதி மூடப்படும் என யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலைகள் யாவும் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் அரையாண்டுப் பரீட்சைகளை நடத்தி முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-152)

## திட்டமிட்டபடி நடக்கும்

ஜி சீ ஈ. (உயர்தர) பரீட்சை ஒத்திப்போடும் நோக்கம் எதுவும் தமக்குக் கிடையாது என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்,

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி இப்பரீட்சை செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகும். (இ-3)

## ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஓடிக்கொண்டிருந்த சைக்கிளின் முன் 'போக்' உடைந்தால் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் படுகாயமடைந்தார்.

உரும்பராய் வடக்கில் சனியன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த இரத்தினம் மூத்துலிங்கம் (வயது 51) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

### தாண்டிக்குளம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் பின்னரே இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்கு உணவு லொறிகள் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த லொறிச் சேவையும் கடந்த இரு வாரமாகத் தடைப்பட்டிருந்தது. (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 298/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 29-07-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org